


சேலம் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட வீரபாண்டி, ஏற்காடு, ஆத்தூர், கெங்கவல்லி ஆகிய தொகுதிகளில் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வாழப்பாடி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மண்டல தேர்தல் பொறுப்பாளரும்,பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத்துறை அமைச்சருமான எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம், மத்திய மாவட்ட செயலாளரும் அமைச்சருமான இரா.ராஜேந்திரன், மேற்கு மாவட்டச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம்.செல்வகணபதி , கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### மாவட்ட மகளிர் அணி – மகளிர் தொண்டர் அணி சார்பில்

# பெரம்பலூர் மாவட்டத்தில் கலைஞர் பிறந்தநாள் புகழரங்கம்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் – வி.ஜெகதீசன் – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. – அ.அருள்மொழி – சேலம் சுஜாதா – மலர்விழி – ந.காருண்யா பங்கேற்பு!

பெரம்பலூர்,ஜூன். 24–

பெரம்பலூர் மாவட்டத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில்

புகழரங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், வழக்கறிஞர்

அ.அருள்மொழி, சேலம் சுஜாதா, பட்டிமன்ற பேச்சாளர் மலர்விழி, இளம் பேச்சாளர் ந. காருண்யா கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில் புகழரங்கம் நிகழ்ச்சி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் தலைமையில், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் புஷ்பவள்ளி ராஜேந்திரன் வரவேற்புரையில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் முன்னிலையில் கர்ணம் சுப்ரமணியம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், திராவிடர் கழகம் பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அ.அருள்மொழி, சேலம் சுஜாதா, பட்டிமன்ற பேச்சாளர் மலர்விழி இளம் பேச்சாளர் ந.காருண்யா கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, சிறப்புரையாற்றி னார்கள்.

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், செ.அண்ணா துரை, மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத்,

மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம். ராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன், சி. ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், நீ. ஜெகதீஷ்வரன், அழகு.நீலமேகம்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.ரவிச்சந்திரன், செல்வ லெட்சுமி சேகர்,எம்.வெங்கடேசன், எஸ்.ஜாகிர்சேன்,

மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், பசும்பலூர் கிளைச் செயலாளர் ஜெயபால்,

மகளிர் அணி மாவட்ட தலைவர் பாத்திமா செல்வராஜ், மகளிர் அணி துணைத் தலைவர் தனலட்சுமி,

மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் அங்கயற்கண்ணி, விஜி புளொரா ரெஜி, புஷ்பராணி, செல்வராணி, வலை தள பொறுப்பாளர்கள் ஜெயப்பிரியா, முருகேஸ்வரி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் புஷ்பவள்ளி ராஜேந்திரன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி தலைவர், மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை தலைவர் சாந்தி,

மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள் சுதா,நட்சத்திரம், கண்ணகி, சுமதி, வலை தள பொறுப்பாளர்கள் சங்கீதா,கண்ணகி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் மகளிர் அணி மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் நகர மகளிர் அணி அமைப்பாளர் பி.அமுதா நன்றியுரையாற்றினார்.

### கோவையில் அ.தி.மு.க. – பா.ஜ.க. உள்ளிட்ட

# மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

### முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. முன்னிலையில்!

கோவை, ஜூன்.24–

தமிழ்நாடு தலைசிறந்த மாநிலமாக தொடர தமிழகத்தில் ஓய்வரியாமல் உழைத்துக் கொண்டிருக்கும் கழகத் தலைவர், இந்தியாவின் நம்பர் 1 முதல்வராக விளங்கும் திராவிட மாடல் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையே தேவை என்பதை உணர்ந்து கோவை கொடிசியாவில் அமைந்துள்ள மேற்கு மண்டல அலுவலகத்தில் மாவட்ட மாணவரணி முன்னாள் துணை அமைப்பாளர் பொள்ளாச்சி கார்த்திக் ஏற்பாட்டில் அ.தி.மு.க வைச் சேர்ந்த மாணிக்கம், 6 வது வட்ட துணைச் செயலாளர் கண்மணி, பொள்ளாச்சி பாஜக பொறியாளர் அணி செல்வம், அருண், வார்டு செயலாளர் நடராஜ், சரவணன், மாக்கினாம்பட்டி சரவணன் உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்டோர் மண்டல பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

மாற்றுக் கட்சிகளில் இருந்து வந்த அனைவரையும் மண்டல பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி நம் கழகத்தின் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் சார்பிலும், இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம், இளம் தலைவர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சார்பிலும், கோவை தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பிலும் வாழ்த்தி வரவேற்று கைத்தறி துண்டு அணிவித்து கழகத்தில் இணைத்துக் கொண்டார்.

இதில் கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, கழக மாணவரணி செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் தமிழ்மறை, பொள்ளாச்சி நகர செயலாளர் நவநீதகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர் மகாலிங்கம், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் எஸ்.பி.எம். பார்த்திபன், முன்னாள் அறங்காவலர் ரத்தினம், அறங்காவலர் சுபாஷிணி, மூர்த்தி , நவீன், சரவணன், ஸ்டீல்ஸ் முருகன், தியாகு, ஆறுச்சாமி, ராம்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



ஒருங்கிணைந்த கோவை மாவட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் மண்டல பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சருமான வி.செந்தில்பாலாஜி தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், கழக மாணவரணி செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் தமிழ்மறை உள்பட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாஞ்சான்விடுதி ஊராட்சி, மழவராயன்பட்டி கிராமம், ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில், மாவட்ட ஊராட்சி 15வது நிதிக்குழு மானியத் திட்டத்தின்கீழ் ரூ.1495 லட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 21.06.2025 அன்று திறந்து வைத்தார்.

### மயிலாடுதுறை ஒன்றியத்தில் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - எம்.பன்னீர் செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# 5 ஊராட்சிகளில் மூன்றாம் கட்ட ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம்!

### அமைச்சர் கோவி.செழியன் தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

மயிலாடுதுறை, ஜூன். 24–

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியம் மயிலாடுதுறை ரூரல் ஊராட்சி, மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம் தலைஞாயிறு, கிழாய், கேசிங்கன்;, கடலங்குடி ஆகிய கிராமங்களில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை உயர் கல்வி துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தொடங்கி வைத்து, பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியம் மயிலாடுதுறை ரூரல் ஊராட்சி, மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம் தலைஞாயிறு, கிழாய், கேசிங்கன், கடலங்குடி ஆகிய ஊராட்சிகளில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.ஸ்ரீகாந்த் தலைமை தாங்கினார்.

மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும். பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ். ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கிழக்கு ஒன்றியம் மயிலாடுதுறை ரூரல் ஊராட்சி, மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம் தலைஞாயிறு, கிழாய், கேசிங்கன், கடலங்குடி ஆகிய கிராமங்களில் ஊரகபகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி செழியன், தொடங்கி வைத்து பார்வையிட்டு வேளாண்மைத்துறை சார்பில் 6 பயனாளிகளுக்கு விவசாய இடுபொருட்களும், சுகாதாரத்துறை சார்பில் 28 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்ட அட்டையையும், வருவாய்துறை சார்பில் 15 பயனாளிகளுக்கு குடும்ப அட்டையினையும், தோட்டக்கலைத்துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு விதைகளும், கூட்டுறவுத்துறை சார்பில் 7 பயனாளிகளுக்கு ரூ.2 இலட்சத்து 50 மதிப்பில் பயிர்கடனும், 3 மகளிர் சுய உதவிக்குழுவிற்கு ரூ.9 இலட்சம் மதிப்பிலான சுழல்நிதி கடனும், 3 பயனாளிகளுக்கு தலா ரூ.90 ஆயிரத்து 800 மதிப்பில் கூட்டுறவு கடன்களையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 25 பயனாளிகளுக்கு பட்டா மாற்றம் உள்ளிட்டவற்றை பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி பேசுகையில் மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதியில்; மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் முகாம் நடைபெற்று கொண்டிருக்கின்றது. முதல் கட்டம் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி பகுதியில் நடைபெற்றது. இரண்டாவது கட்டம் ஊராட்சி பகுதிகளில் நடைபெற்றது. தற்போது மூன்றாவது கட்டமாக குக்கிராம பகுதியில் ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், கூலி வேலைக்கு செல்பவர்கள், ஆதிதிராவிட மக்கள் போன்ற அனைத்துத் தரப்பு மக்களின் கோரிக்கைகளை பெற்று அதற்கு தீர்வு காண வேண்டும் என்ற நோக்கில் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது.

மக்கள் அரசாங்கத்தை தேடி செல்லும் நிலை மாறி, மக்களைத் தேடி அரசாங்கம் செல்லும் ஒரே திட்டம் இந்த மக்களுடன் முதல்வர் திட்டம். ஒவ்வொரு நகராட்சிக்கும் 6 முகாம்கள் வீதம் மொத்தம் 12 முகாம்கள் அதேபோல், ஒவ்வொரு பேரூராட்சிக்கும் 2 முகாம்கள் வீதம் 8 முகாம்கள், 10 நாட்களுக்கு 20 முகாம்கள், 15 துறைகளிலிருந்து 45 சேவைகள் வழங்கப்படுகிறது. பெறப்பட்ட மனுக்கள் 3724, அவற்றில் தீர்வு காணப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 2808 ஆக கொடுக்கப்பட்ட மனுக்களில் 80 சதவீதம் மனுக்களுக்கு உரிய தீர்வு கண்ட மாவட்டம் நம் மயிலாடுதுறை மாவட்டம்.

அனைத்துத்துறைகளின் கீழ் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளது, நீங்கள் உங்கள் கோரிக்கைகளை மனுக்களாக வழங்கி, தீர்வை பெற்றுக்கொள்ளலாம். அதோடு இல்லாமல், உங்களுக்கு உடல் ரீதியாக ஏதேனும் பிரச்சினை இருந்தால் அதுவும் இங்கு மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளலாம். இவற்றை நீங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கலைஞர் மகளிர் உரிமைத்தொகை இதுவரை 1 கோடியே 20 இலட்சம் பேருக்கு வழங்கியிருக்கின்றோம். அடுத்தக் கட்டமாக விடுபட்ட தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் முகாம்கள் நடத்தப்பட்டு, வழங்கவுள்ளோம். ஏழைகளை பாதுகாக்கும் ஒரே முதலமைச்சர் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். அரசு பள்ளியில் படித்த மாணவர்களுக்கு தங்களின் படிப்பு செலவிற்கு மாதம் ரூ.1000 வழங்கும் திட்டம், குழந்தைகளின் பசியினை போக்க, காலை உணவு திட்டம், மருத்துவ காப்பீடு அட்டை வழங்கும் திட்டம் போன்ற பல மகத்தான திட்டத்தினை வழங்கியவர் என உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பேசினார்

நிகழ்ச்சிகளில் மாநில விவசாய தொழிலாளர் அணி இணை செயலாளர் ஜக.வீரபாண்டியன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் வை. சௌமியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத்து. மகேந்திரன், ஜி.என்.ரவி, இராம.இளங்கோவன், மாவட்டக் கழக துணை செயலாளர்கள் மு.ஞானவேலன்.எஸ்.செல்வமணி, கண்ணகி பன்னீர், மாவட்ட கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், ஒன்றிய கழக செய்லாளர்கள் ப.முருகமணி, என். இளைய பெருமாள், பி.எம்.அன்பழகன் ஏ. ஜி.ஜே. பிரபாகர், பஞ்சுகுமார், எம். அப்துல்மாலிக், ஞான, இயைநாதன், ஏ.ஆர்.ராஜா, கு. வைத்தியநாதன், சீர்காழி நகரக் கழக செயலாளர் ம. சுப்பராயன், பொதுக்கு உறுப்பினர்கள் எஸ்.சுவாமிநாதன், ஹர்ஷத், நத்தம் ஏ.வின்செண்ட், பி.சிவ தாஸ், எஸ்.காந்தி, பேரூர் செயலாளர்கள் அண்ணாதுரை, முத்து ராஜா,

ஒன்றிய குழு முன்னாள் தலைவர்கள் ஜெய பிரகாஷ் க.சுரேஷ், மயிலாடுதுறை வடக்கு ஒன்றிய, மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியம் மயிலாடுதுறை ரூரல் ஊராட்சியில் கழகத்தின் சார்பில் நலத்திட்ட உதவிகளை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வழங்கினார். உடன் மாவட்டக் கழக செயலாளரும். பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகள், மயிலாடுதுறைந்த், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய செயலாளர் ப.முருகமணி மற்றும் பலர் உள்ளனர்.



கோவை மாவட்டக் கழக அலுவலகத்தில் மாநகர் மாவட்ட பகுதி கழகப் பொறுப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன் உள்பட பகுதி கழகப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.